**காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனி - 2024**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கம்பனியின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும்அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத்
தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில்
முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட
தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால்

நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5. நிதி கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) நியமத்தின் 02 ஆம் பிரிவு - கருதுகோள் மற்றும் விரிவாக்கல் தத்துவம்** | | |
| சிறிய மற்றும் அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 2.15 ஆம் பந்திக்கு முரணாக 2019 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 2.22 மில்லியனான பொருளாதார சேவைக் கட்டணம் நடைமுறை ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. | இது சம்பந்தமான மேன் முறையீடு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் எதிர்வரும் காலங்களில் வருமான வரியினைச் செலுத்தும் போது இந்த செலுத்திய வரியினைத் தீர்த்துவைப்பதற்காக சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களை சரியாக அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) நியமத்தின் 07 ஆம் பிரிவு - காசுப் பாய்ச்சல் கூற்று**

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப் பாய்ச்சலினைத் தீர்மானிக்கும் போது சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதிக் கணக்கீட்டு நியமத்தின் 7.8 ஆம் பந்தியின் பிரகாரம் கமபனியால் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது ரூபா 9.44 மில்லியன் வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கழித்து காட்டப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் 7.8(C) பந்தியின் பிரகாரம் சுழற்சி முறைமையில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப் பாய்ச்சலினைத் தீர்மானிக்கும் போது முதலீடு அல்லது நிதிச் செயற்பாடுகளின் கீழ் கொண்டு வரப்படுகின்ற அனைத்து விடயங்களும் நீக்கப்பட்டுள்ளது. கம்பனியால் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தாயாரிக்கும் போது 03 மாதங்களை விட குறைந்த காலப்பகுதி தொடர்பான நிலையான வைப்புக்களிலிருந்து பெற்ற ரூபா 9.44 மில்லியன் வட்டி வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்தல் வேண்டும். |

**(இ) நியமத்தின் 17 ஆம் பிரிவு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | | |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பதிவழிப்புச் செய்த பெறுமதி ரூபா 56.48 மில்லியனான கட்டிடங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான எச்சப் பெறுமதி மற்றும் பயன்தரும் ஆயுள் காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 63.51 மில்லியன் கிரயமான முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தற்பொழுதும் பயன்படுத்தப்படுகின்ற 608 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை சரிசெய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17 இன் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு தகமை பெற்ற திகதியிலிருந்து காலப்பகுதி தொடர்பான பெறுமானத் தேய்வு அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். இக்கணக்கீட்டின் போது காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் புதிதாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனங்கள், உபகரணங்கள் என்பனவற்றின் எச்சப்பெறுமதியின் (Residual Value) சதவீதம் காணப்படுவதாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டிடங்கள் பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான எச்சப் பெறுமதி மற்றும் பயன்தரும் ஆயுள் காலத்தினை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) நியமத்தின் 27 ஆம் பிரிவு - சொத்துக்கள் சேதமடைதல்**

| | | |
|---|---|---|
| ‘‘கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டம்’’ இதற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 55.42 மில்லியன் பெறுமதியான அனைத்து சொத்துக்களும் மீளாய்வாண்டளவில் சேதமடைந்திருந்தும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 27.9 ஆம் பந்தியின் பிரகாரம் எந்த சேதமடைதல் நட்டமும் கம்பனியால் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததனால் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 55.42 மில்லியனில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO Plant) மற்றும் அதனை ஸ்தாபிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி பொறுப்பேற்கப்பட்டுள்ளது. உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் இது சம்பந்தமாக பல எழுத்துமூல வேண்டுதல் மேமற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக தாய்க் கம்பனி கூட்டுத்தாபனத்தின் உரிய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நியமத்தின் பிரகாரம் சேதமடைதல் நட்டம் சரியாக அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

**(உ) நியமத்தின் 28 ஆம் பிரிவு - ஊழியர் பிரதிபலன்**

| | | |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 28 ஆம் பந்திக்கு இணங்க திட்டவட்டமான பிரதிபலன் பொறுப்பினை அளவீடு செய்தல், ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படாத இருவழிப் பொறுப்பினை உள்ளடக்குதல், கழிவு செய்தல், காப்பீட்டு கணிப்பினை மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளாது ரூபா 5.53 மில்லியன் தொகையான ஊழியர் பணிக்கொடைச் செலவு மீளாய்வாண்டின் போது கம்பனியால் அடையாளம் காணப்பட்டிருந்ததனால் அப்பெறுமதி சம்பந்தமாக மற்றும் அது தொடர்பாக அடையாளம் காணப்பட்ட ரூபா 24.17 மில்லியனான நடைமுறையற்ற பொறுப்புக்களின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கம்பனியால் நேரடி முறைமைக்கு இணங்க ரூபா 1.45 மில்லியனான ஊழியர் பணிக்கொடை செலவு மீளாய்வாண்டின் போது அடையாளம் காணப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டில் காப்பீட்டு கணிப்பீட்டின் சாதகம் மற்றும் பாதகங்களை அடையாளம் கண்டு அதற்கிணங்க செம்மையாக்கல்கள் செய்யப்படும். | நியமதம்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஊ) நியமத்தின் 29 ஆம் பிரிவு – வருமான வரி**

| | | | |
|---|---|---|---|
| (i) | கம்பனியால் 2019/20 ஆம் ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளின் வரிக்காக நட்டமாகிய ரூபா 152.62 மில்லியனுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 45.78 மில்லியன் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டிருந்தும் கம்பனி தொடர்ச்சியாக 06 ஆண்டுகளின் வரி நட்டத்தினை அறிக்கையிடுதல் மற்றும் 2024/25 ஆம் ஆண்டில் மற்றும் அதனைத் தொடர்ந்து கம்பனி போதியளவு இலாபத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு புதிய தொழில் முயற்சி திட்டம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டதனால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 29.8 ஆம் பந்திக்கு இணங்க பிற்போட்ட வரிக்காக அடையாளம் காணப்பட்ட 2019/20, 2020/21 மற்றும் 2021/22 ஆகிய ஆண்டுகளுக்குரிய நட்டமாகிய ரூபா 94.28 மில்லியன் மீது அடையாளங் காணப்பட்ட ரூபா 28.28 மில்லியனான பிற்போட்ட வரிச் சொத்துக்களை எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்ய முடியாத நிலைமை காணப்பட்டது. | 2019/20 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகளின் வரிக்கான நட்டமாகிய ரூபா 152.6 மில்லியனுக்காக நடைமுறை ஆண்டின் போது ரூபா 45.78 மில்லியன் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அயைடாளம் காணப்பட்டுள்ளது. கம்பனி தொடர்ச்சியாக 05 ஆண்டுகளாக வரி நட்டத்தினை அறிக்கையிடாதிருந்தும் கூட்டுத்தாபனம் மணல் தயாரிக்கும் செயற்திட்டம் தொடர்பான சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் நீரினை தேக்கிவைக்கும் குளம், ஆகிய சொத்துக்களை ஒப்படைத்ததன் பின்னர் 2024/25 ஆம் ஆண்டில் மற்றும் அதன் பின்னர் நிறுவனம் போதியளவு இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் 2024 ஆம் ஆண்டு தொடர்பான நட்டமாகிய ரூபா 25.78 மில்லியன் மீதான பிற்போட்ட வரிச் சொத்து ரூபா 7.74 மில்லியனை அடுத்துவரும் ஆண்டில் அறவீடு செய்யும் இயலுமை காணப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். |
| (ii) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி கணக்கீட்டு நியமத்தின் 29.16 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் பிற்போட்ட வரிச் சொத்துக்காக கவனித்துப்பார்க்கப்பட வேண்டிய அறவிட முடியா கடன் ரூபா 4.57 மில்லியனுக்கு அறவிட முடியா கடனுக்கான ஒதுக்கீடான ரூபா 0.133 மில்லியனால் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக பிற்போட்ட வரிச் சொத்து ரூபா 1.33 மில்லியன் | 2025 ஆம் ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் சரியாக அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணிகளை மதிப்பீடு செய்யும் இலாபம் ரூபா 34.17 மில்லியனாக இருந்த போதிலும் பிற்போட்ட வரிக்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காணிகளை மதிப்பீடு செய்யும் இலாபம் ரூபா 34.50 மில்லியனாக இருந்ததனால் பிற்போட்ட வரிப்பொறுப்பு ரூபா 0.11 மில்லியனால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டது எனவும் அவதானிக்கப்பட்டது.

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 2.1.3 இன் கீழ் பிற்போட்ட வரியினை கணக்கீடு செய்யும் போது சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதிக்கும் வரிக்காக பதிவழிக்கப்பட்ட பெறுமதிக்குமிடையேயான வித்தியாசத்தினை பிற்போட்ட வரிக்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் பிற்போட்ட வரிக்காக செம்மையாக்கல் செய்யும் போது அப்பெறுமதியும் செம்மையாக்கப்பட்டிருந்தது. | கம்பனியால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான பொழிப்பின் 2.1.3 ஆம் பந்தியான பிற்போட்ட வரிக் கொள்கை 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | கம்பனிக்குரிய சட்டங்கள் விதிகள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளுக்கிணங்க கணக்கீட்டு கொள்கைகள் தயாரித்தல் மற்றும் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் ரூபா 301.28 மில்லியன் பெறுமதியான கடல் மணலை பொதி செய்யும் கட்டிடம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 326.30 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு தாய்க் கூட்டுத்ததாபனத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் கிரயத்தினை கணக்குகளிலிருந்து நீக்கும் போது அதில் உள்ளடக்கப்பட்ட நீரினை தேக்கிவைக்கும் குளத்தில் ஒரு பகுதியின் பெறுமதியான ரூபா 25.02 மில்லியனும் உள்ளடக்கப்பட்டு கம்பனியின் நிறுத்திவைத்த உழைப்புக்கள் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நடைமுறை வேலைக் கணக்கில் இருந்த கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பெறுமதி நீக்கப்பட்டதுடன் நீரினை தேக்கிவைக்கும் குளத்தினையும் உள்ளடக்கி ஏனைய ஆதனங்கள் சம்பந்தமாக தாய்க் கம்பனியுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்திற்கு வந்ததன் பின்னர் மிகுதிப் பெறுமதியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான சரியான கிரயம் பூர்த்திசெய்யப்படாத வேலைகள் கணக்கிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா மில்லியன் | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| நிலையான வைப்பு மீதி மற்றும் வங்கி நடைமுறை கணக்கு மீதி | 4.465 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | வங்கியின் தரவுகளை நாளதுவைரயாக்குவதற்காக கம்பனியின் 15 படிவங்களைச் சமர்ப்பிக்கும் வரை மாதிரி கையொப்பங்களை அந்த வங்கி ஏற்றுக்கொள்ளாததனால் முடியுமான அளவு விரைவாக 15 படிவங்களையும் வங்கிக்கு வழங்கி இப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படும். | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 61.41 மில்லியன் கிடைக்க வேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதியில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்ட மீதி ரூபா 11.04 மில்லியன் மீதி மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதி ரூபா 48.72 மில்லியனாகும். இதில் ரூபா 13.28 மில்லியன் கம்பனியின் தாய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. | இந்த கிடைக்க வேண்டிய ரூபா 61.41 மில்லியன் நிறுத்திவைத்த பணத்தில் ரூபா 4.9 மில்லியன் பணத்திற்கான ஒப்பந்தம் இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஆண்டின் இறுதியில் இந்த நிறுத்திவைத்தல் பணம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் இன்று வரை ரூபா 3.87 மில்லியன் பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரிசை அமைச்சினு ாடாகவும் இப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தினை துரிதமாக முடிவுறுத்தி கிடைக்க வேண்டிய நிறுத்திவைத்தல் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்த கடன்பட்டோர்கள் மற்றும் வணிக கடன்பட்டோர்களிடமிருந்து கம்பனியினால் அறவிட வேண்டிய பணம் முறையே ரூபா 26.53 மில்லியன் மற்றும் ரூபா 23.40 மில்லியன் ஆக இருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 3.73 மில்லியன் மற்றும் ரூபா 8.86 | ஒப்பந்த கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 6.07 மில்லியன் மற்றும் வணிக கடன்பட்டோர் மீதியில் ரூபா 12.28 மில்லியன் இலங்கை காணி அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியாகும். ஒப்பந்த கடன்பட்டோர்கள் முறையே ரூபா 1.40 மில்லியன் மற்றும் ரூபா 3.17 | கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 9.63 மில்லியன் மற்றும் ரூபா 11.65 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவீடு செய்யப்படாது காணப்பட்டது. இந்த கடன்பட்டோர் மீதியில் மற்றும் வணிக கடன்பட்டோர் மீதியில் முறையே ரூபா 6.07 மில்லியன் மற்றும் ரூபா 12.28 மில்லியன் தாய்க் கூட்டுத்தாபனமாகிய இலங்கை காணி அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய வணிககடன்பட்டோர் மீதியில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 2.59 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 7.34 மில்லியனும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மில்லியன் அறவிட முடியா கடனாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 8.73 மில்லியன் மற்றும் ரூபா 8.28 மில்லியன் பணம் 2025 யூலை மாதம் வரை அறவீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 6.17 மில்லியன் பெறுமதியான கிடைக்க வேண்டிய வருமான வரிப் பெறுமதியில் ரூபா 2.22 மில்லியன் பொருளாதார சேவைக் கட்டணங்களையும் (ESC) ரூபா 2.73 மில்லியன் நிறுத்திவைத்தல் வரியையும் (WHT) ரூபா 1.22 மில்லியன் கிடைக்க வேண்டிய வருமான வரியையும் உள்ளடக்கியிருந்துதடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. | கிடைக்க வேண்டிய வருமானவரிப் பெறுமதியில் ரூபா 3.03 மில்லியன் பொருளாதார சேவைக் கட்டங்களையும் (ESC) ரூபா 0.93 மில்லியன் நிறுத்திவைத்த உழைப்புக்கள் மீதான வரியினையும் (WHT) மற்றும் மிகுதியானது கிடைக்க வேண்டிய வருமான வரிகளையும் உள்ளடக்கியுள்ளது. கம்பனியால் அடுத்துவரும் ஆண்டுகளில் இலாபம் உழைக்கையில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி மீதிகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 46.91 மில்லியனான செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் (Retention Payable) மீதியில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 3.56 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 43.35 மில்லியனும் ஆகும். | இந்த ரூபா 46.91 மில்லியன் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் கம்பனியின் வாடிக்கையாளர்களால் கம்பனிக்கு விடுவித்ததன் பின்னர் உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்களை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் வணிக கடன்கொடுத்தோர் மீதி ரூபா 82.32 மில்லியன் ஆனதுடன் அதில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட தீர்த்துவைக்கப்படாத மீதி ரூபா 39.67 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 27.03 மில்லியனும் ஆகும். | இந்த செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 82.32 மில்லியனில் ரூபா 27.56 மில்லியன் இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாதபனத்திற்குச் செலுத்த வேண்டியதுடன் ரூபா 43.72 மில்லியன் பணம் எல்.ஆர்.டீ.சீ சேவைக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணமாகும். மிகுதியான ரூபா 11.04 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 9.30 மில்லியன் தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பெறுமதியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கான பொருத்தமான ஒரு நடைமுறையினைத் தயாரித்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறு தியில் ஒப்பந்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 28.23 மில்லியனானதுடன் அவற்றில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட தீர்த்துவைக்கப்படாத மீதி ரூபா 2.90 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்த்துவைக்கப்படாத மீதி ரூபா 25.59 மில்லியனும் ஆகும். | இந்த செலுத்த வேண்டிய ஒப்பந்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 28.23 மில்லியனில் ரூபா 21.31 மில்லியன் இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய பணமாகும். அதற்கு மேலதிகமாக மிகுதியான ரூபா 6.92 மில்லியன் ஒப்பந்த கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 1.09 மில்லியன் தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு துரிதமாக ஒரு நடைமுறையினைத் தயாரித்தல் வேண்டும |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 18.27 மில்லியன் கிடைக்க வேண்டிய ஆயத்தப்படுத்தல் முற்பண மீதியில் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் | இந்த ரூபா 18.27 மில்லியன் பணம் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ஆயத்தப்படுத்தல் முற்பணமாகும். ஒப்பந்தக்காரர்கள் விலைப்பட்டியலினைச் சமர்ப்பித்ததன் | உடன்பாடிக்கையின் பிரகாரம் ஒப்பந்தததை துரிதமாக முடிவுறுத்த மற்றும் கிடைக்க வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்ட காலமாக காணப்பட்ட மீதி ரூபா 6.91 மில்லியன் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 11.36 மில்லியனாகும். அந்த 05 ஆண்டுகளை மிகைத்த மீதியில் 04 உப ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9.35 மில்லியன் பெறுமதி காணப்பட்டதுடன் அந்த உப ஒப்பந்தர்காரர்கள் இடைநடுவில் ஒப்பந்த செயற்பாட்டினை நிறுத்தியுள்ளனர். அப்பெறுமதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பின்னர் இவற்றினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இச்செயற்திட்ட நடவடிக்கைகளை உடன்படிக்கையின் பிரகாரம் முடிவு செய்யாமையின் காரணமாக ரூபா 11.37 மில்லியன் ஆயத்தப்படுத்தல் முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு முடியாதுள்ளதுடன் ரூபா 6.9 மில்லியன் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டு வருவதுடன் இறுதி விலைப்பட்டியலினை சமர்ப்பித்ததன் பின்னர் இந்த ஆயத்தப்படுத்தல் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பண மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 40.75 மில்லியன் செலுத்த வேண்டிய ஆயத்தப்படுத்தல் மீதியில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்குமிடையிலான மீதி ரூபா 16.77 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 23.99 மில்லியனும் இன்று வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை . | இந்த ரூபா 40.75 மில்லியன் செலுத்த வேண்டிய ஆயத்தப்படுத்தல் முற்பணம் வாடிக்கையாளர் நிறுவனத்தினால் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டுள்ள பெறுமதியாகும். அவற்றில் ரூபா 24 மில்லியன் முற்பணங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிர்மாணச் செயற்திட்டங்களுக்குரியதாகும். உரிய நிறுவனங்களுடன் இணைக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் இப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதியான ஆயத்தப்படுத்தல் முற்பணங்கள் வாடிக்கையாளர் நிறுவனத்தினால் விலைப்பட்டியலினை தீர்த்துவைத்தன் பின்னர் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆயத்தப்படுத்தல முற்பணம் தொடர்பாக துரித நடவடிக்கையொன்று எடுத்தல் வேண்டும். |

### 1.7 தொடர்புபட்ட தரப்பினர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வணிக கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 43.73 மில்லியன் கம்பனியின் துணைக் கம்பனியான எல்.ஆர்.டீ.சீ சேவை தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்ததுடன் அது வணிக கடன்கொடுத்தோரில் 53 சதவீதமாகும். அவற்றில் ரூபா 23.65 மில்லியனக் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 13.91 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் செலுத்த வேண்டி இருந்தது. | கம்பனியின் துணைக் கம்பனியான எல்.ஆர்.டீ.சீ தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பெறுமதி தவணை ரீதியாக செலுத்தப்படுவதுடன் இன்று வரை இந்த மீதியில் ரூபா 0.698 மில்லியன் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | தொடர்புபட்ட தர்பினர் கொடுக்கல் வாங்கல்களை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மைகள** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் | | | | |
| (i) | 133 ஆம் பிரிவு | கம்பனியால் 2019 ஆம் ஆண்டிலிருந்து எந்த வருடாந்த பொதுக் கூட்டமும் நடாத்தப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த கூட்டங்களை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுக் கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 166 ஆம் பிரிவு | ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபையினால் ஐந்தொகை திகதியின் பின்னர் 06 மாதங்களுக்குள் அத்திகதியில் முடிவடைந்த கணக்கு காலப்பகுதிக்குள் கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பான ஒரு ஆண்டறிக்கையினை தயாரிக்க வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த கூட்டங்களை கூட்டி ஆண்டறிக்கையினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 757 | | நியமனத்தை பெற்றுக்கொண்ட ஒரு மீளாய்வுச் சபையினால் பொருள் மீளாய்வினை மேற்கொள்ளும் போது அத்திகதியில் உள்ளவாறான பொருள் இருப்பு பதிவேட்டில் காட்டப்படுகின்ற மீதியானது நிறுவனத்தின் இருப்புடன் ஒப்பிட்டு பரீட்சித்துப் பார்த்து ஏதாவது வித்தியாசம் காணப்படுமாயின் அது பற்றி உரிய படிவத்தின் மூலம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனி | மீளாய்வுச் சபையினால் பொருள மீளாய்வின் போது பொருட்கள் பௌதீக ரீதியாக காணப்பட்டிருந்தும் பொருள் பதிவேட்டு புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பொருட்கள் மீண்டும் ஏடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீதிகள் சமர்ப்பிக்கப்படவில்லையாயின் உரிய படிவத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மீளாய்வின் போது வெளிப்படுத்தப் பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் மற்றும் சமகால சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க 14 விடயங்கள் தொடர்பாக ரூபா 2.08 மில்லியன் பெறுமதியான பதிவேட்டு புத்தகத்திலுள்ள மீதியு டன் இணங்கியிருக்காததுடன் 06 விடயங்கள் தொடர்பாக ரூபா 165,081 பெறுமதியான பொருட்கள் பௌதீகரீதியாக காணப்பட்டிருந்தும் பொருள் பதிவேட்டு புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2021 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 01/2021(ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2024 பெப்ரவரி 28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 14.5 ஆம் பந்தி | தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அதன் துணைக் கம்பனிகளின் செயலாற்றிலினை கண்காணிப்புச் செய்வதற்காக வசதிகளை வழங்குவதற்கான கட்டமைப்பினை ஸ்தாபிக்க வேண்டியதுடன் அது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபையானது துணைக் கம்பனிகளின் செயலாற்றல் தொடர்பான கலந்துரையாடலினை ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையேனும் மேற்கொள்ள வேண்டியதுடன் போதியளவில் முதலீட்டின் மீதான பிரதிபலன்கள் கிடைக்கின்றது என சான்றுபடுத்த வேண்டிய போதிலும் கம்பனியால் எல்.ஆர்.டீ.சீ சேவை தனியார் கம்பனி சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்கும் வகையில் நிறுவனத்தின் துணைக் கம்பனிகளின் செயலாற்றலினை கண்காணிப்புச் செய்வதற்காக தாய்க் கம்பனியான இக்கம்பனியின் பணிப்பாளர் சபையின் கலந்துரையாடலுக்கு உட்படுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | துணைக்கம்பனிகளின் செயலாற்றலினை கண்காணிப்புச் செய்வதற்காக துரிதமாக ஒரு கட்டமைப்பினை ஸ்தாபித்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2025(ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | HM 1-1 தொகுதியைச் சார்ந்த ஒரு உத்தியோகத்தருக்கு அங்கீகரித்த எரிபொருள் அளவு 115 லீற்றராக இருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் அந்த எல்லையினை மிகைத்து ரூபா 400,243 பெறுமதியான 1001 லீற்றர் எரிபொருள் எந்த அங்கீகாரமும் இன்றி கம்பனியின் உதவி பொது முகாமையாளரினால் (ஒப்பந்த அடிப்படை) பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த ரூபா 400,243 பெறுமதியான 1,001 லீற்றர் எரிபொருள் அளவு கம்பனியின் உதவி பொது முகாமையாளரின் (ஒப்பந்த அடிப்படை) இறுதிக் கொடுப்பனவுகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு எரிபொருள் வழங்கும்போது நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.7 ஆம் பந்தி | உரிய அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாடின்றி 2024 யூலை 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் நாவல தொழிற்சாலையின் உடைந்த இருப்புக்களை விற்றுப்பெற்ற பணத்திலிருந்து 40 சதவீதம் அதாவது ரூபா 1.39 மில்லியன் அலுவலக ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நாவல தொழிற்சாலையினை சுத்தம் செய்வதற்காக ஊழியர்களின் ஊழியப் பங்களிப்பு இலவசமாக பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவர்களின் வாழ்க்கை நிலைமையை அதிகரிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கம்பனியின் பொது முகாமையாளரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இந்த நிதியத்தை தோற்று வித்து இதன் மூலம் ஊழியர்களுக்கு பிரதிபலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் கம்பனியின் நிதி பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு இணங்காத அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.9 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01-07(எ) பந்தியின் பிரகாரம் ஆரம்ப வேலைவாய்ப்பு வெளிப்படுத்தலினை வழங்கியிருக்காத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள வேலைவாய்ப்புக்கள் உள்ள எவராவது ஒரு வேலைவாய்ப்பாளரின் ஊதியங்களை செலுத்துவது சம்பந்தமாக வரி சுற்றறிக்கை 07 தொடர்புபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளின் போது பணிப்பாளர் சபைக்கு படிகளைச் செலுத்தும் போது மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் யூலை மாதத்திலிருந்து உரிய இரட்டை வேலை வாய்ப்பு வெளிப்படுத்தலினைப் பெற்று பணிப்பாளர் சபைக்கு படிகளைச் செலுத்தும் போது உரிய வரிப்பணத்தை அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வரி தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் வரிக்கு முன்னைய தேறிய நட்டம் ரூபா 35.41 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 7.56 மில்லியனாகும். அதற்கிணங்க வரிக்கு முன்னைய தேறிய இலாபத்தில் ரூபா 42.97 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனைக் கிரயம் ரூபா 26.15 மில்லியனால் அதிகரித்தல், தாபன மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 19.34 மில்லியனால் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவுகள் பின்வருமாறு.

| **விபரம்** | **2024 ரூபா மில்லியன்** | **2023 ரூபா மில்லியன்** | **வித்தியாசம் ரூபா மில்லியன்** | **வித்தியாசம் சதவீதமாக (%)** |
|---|---|---|---|---|
| வருமானம் | 204.79 | 196.33 | 8.46 | 4.31 |
| ஏனைய வருமானம் | 20.78 | 26.32 | (5.54) | (21.05) |
| விற்பனைக் கிரயம் | 159.52 | 133.37 | 26.15 | 19.61 |
| நிருவாகச் செலவுகள் | 95.51 | 76.17 | 19.34 | 25.39 |
| நிதிக் கிரயம் | 5.07 | 4.77 | 0.3 | 6.29 |

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியில் காணப்பட்ட பிரதான 03 வருமான மூலங்களின் வருமானம் ரூபா 30.2 மில்லியனால் அதாவது 15.38 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கம்பனியால் மரச் சாம்பல்களை (Fly ash|) கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் வியாபார நடவடிக்கை புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததனால் அதன் மூலம் ரூபா 38.66 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்ததன் காரணமாக வருமானம் 4.31 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மரச் சாம்பலை(Fly ash) கொள்வனவு செய்வதற்கு ரூபா 32.14 மில்லியன் செலவொன்று செய்யப்பட்டமை விற்பனைக் கிரயம் 19.61 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ஊழியர் சம்பளமும் வேதனங்களும் 39.35 சதவீதத்தால் அதிகரித்தமை நிருவாகச் செலவுகள் 25.39 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக கம்பனியின் விகிதாசாரப் பகுப்பாய்வு கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

| | **2024** | **2023** |
|---|---|---|
| கடன் உரிமை மூலதன விகிதம் | 6.37:1 | 3.26:1 |
| மொத்த இலாப வரம்பு (சதவீதம்) | 22.11 | 32.07 |
| நடைமுறை விகிதம் | 1.44:1 | 1.50:1 |
| விரைவு விகிதம் | 1.19:1 | 1.22:1 |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 2.93 | 2.13 |
| கடன் சேகரிக்கும் காலம் (நாட்களின் எண்ணிக்கை) | 125 | 171 |

(அ) கம்பனியில் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது கடன் உரிமை மூலதன விகிதம் முறையே 6.37:1 மற்றும் 3.26:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் உரிமை மூலதன விகிதம் அதிகரித்திருந்தது. இதற்கிணங்க கம்பனிக்கு உயர்ந்த கொடுப்பனவு ஆபத்து காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மொத்த இலாப விகிதம் மீளாய்வாண்டில் 22.11 மற்றும் முன்னைய ஆண்டில் 32.07 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 9.96 ஆல் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் வருமானம் ரூபா 8.46 மில்லியனால் அதிகரிக்கையில் விற்பனைக் கிரயம் ரூபா 26.15 மில்லியனால் அதிகரித்துள்ளது. கம்பனியின் வருமானம் அதிகரிப்பதற்கு ஒப்பீடாக உயர்ந்த பெறுமதியில் கம்பனியின் விற்பனை கிரயம் அதிகரித்தல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதி ரூபா 47.64 மில்லியனால் குறைவடைந்தமையால் நடைமுறை விகிதம் 1.50:1 முதல் 1.44:1 வரை மேலும் சரிவடைந்திருந்தது.

(ஈ) கம்பனியின் கடன்பட்டோர் புரள்வு விகிதம் 2.13 இலிருந்து 2.93 வரை அதிகரித்திருந்ததுடன் கடன் சேகரிக்கும் காலமும் 46 நாட்களால் குறைவடைந்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறந்த நிலைமையொன்றை காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் கடல் மணலை பொதி செய்யும் 500,000 பேக்குகள் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து ரூபா 12.13 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்தும் ரூபா 13.79 மில்லியன் பெறுமதிக்கு கொள்வனவு செய்ததனால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1.67 மில்லியனாகும். பொதி செய்யும் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது மிகுதியான 436,405 பேக்கள் கம்பனியின் உதவி பொது முகாமையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ரூபா 5.88 மில்லியனுக்கு 2022 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்ததன் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 7.74 மில்லியனாகும். இது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் கண்டு எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் இன்று வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் முடிவுரை மற்றும் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியின் தேவை மற்றும் சந்தை நிலவரத்தை அடையாளம் கண்டதைத் தொடர்ந்து, கொள்வனவுகள் அனைத்தும் கொள்வனவுச் சட்டங்களுக்கு உட்பட்டு மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், அந்தச் சட்டங்களுக்கு முரணாக தீர்மானம் மேற்கொண்ட தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டம்** | | | |
| | (i) | செயற்திட்ட மதிப்பீடுகள் சாத்திய வள ஆய்வுகள் அல்லது தொடக்க கிரய மதிப்படீடு தயாரிக்கப்படாது 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பித்த ‘‘கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டத்திற்காக’’ 12 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 200 மில்லியன் கடன் தாய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக கம்பனியால் மேற்கொண்ட முழுக்கிரயம் ரூபா 382.50 மில்லியனாக இருந்தும் செயற்திட்டம் நட்டமடைந்ததன் காரணமாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட காணிகளும் கட்டிடங்களும் 2021 யூன் 14 ஆந் திகதி 50 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் ஆற்று மணலை தோண்டி எடுப்பதனை மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான திர்மானங்கள் அப்போது காணப்டபட்ட மணலுக்கான வேண்டுதல்களை கவனத்திற்கு எடுத்து கடல் மணலை மேம்படுத்தும் குறிக்கோளில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இச்செயற்திட்டத்தினை ஆரம்பித்ததன் பின்னர் காணிகளை பொறுப்பேற்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாமையின் காரணமாக அவ்வாறு கூட்டுத்தாபனத்தின் இக்காணியை கம்பனிக்கு ஒப்படைப்பதற்கு முடியாதுள்ளது. | சாத்தியவள ஆய்வுக்கு அடுத்தபடியாக, திட்டங்களைத் தொடங்குவதற்கும், திட்டமிட்டபடி முறையான முகாமைத்துவத்துடன் அவற்றைச் நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் அத்துடன், அதனைப் பின்பற்றத் தவறிய பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| | (ii) | முறையான பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டத்திற்காக இரும்புக் கட்டிட டெம்ப்லேட்டினை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து நிர்மாணிப்பதற்காக கம்பனியால் ரூபா 211.93 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இக்கொள்வனவின் போது இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் தொடர்பாக கம்பனியால் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. | இக்கொள்சவனவின் போது இடம்பெற்றுள்ளது என அறிக்கையிடப்பட்ட ஒழுங்கீனங்கள் தொடர்பான பரீட்சிப்புக்கள் தேசிய பெறுகைக் குழுவின் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில் தற்பொழுது விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பான விசாரணையை நிறைவு செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் தாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியால் | | ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்காக | முறையான கிரய பிரதிபலன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 408 மில்லியன் பெறுமதியான 16 ஒப்பந்தங்களுக்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 691,724 மற்றும் ரூபா 51,674 தொகையான 02 ஒப்பந்தங்களைத் தவிர்த்து மிகுதியான 14 ஒப்பந்தங்கள் தொடர்பான விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. பெற்றுக்கொள்ளப்பட்ட 02 ஒப்பந்தங்களின் பெறுமதியானது விலை மனுக்கள் வைக்கப்பட்ட முழு ஒப்பந்த பெறுமதியில் 0.18 சதவீதமாக இருந்தது. | கம்பனியால் ஆண்டில் 16 ஒப்பந்தங்களுக்கு லிலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்த விலை மனுக்களை சமர்ப்பிக்கும் போது 02 ஒப்பந்தங்கள் தொடர்பான விலை மனுக்கள் எங்களுக்கு கிடைத்த போதிலும் ஏனைய 14 விலை மனுக்களின் விலை மனுதாரர்களுக்கிடையே காணப்பட்ட போட்டித் தன்மையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது. | பகுப்பாய்வினை மேற்கொண்டு சந்தைப் போட்டித் தன்மைக்கு ஏற்ப திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கம்பனியின் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேதன கொடுப்பனவிற்காக 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திடமிருந்து 12 சதவீத வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 24 மில்லியன் கடனுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்த வேண்டிய ரூபா 15.87 மில்லியன் வட்டிப் பணம் இந்த அறிக்கைத் திகதி- வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேதனக் கொடுப்பனவிற்காக 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திடமிருந்து இந்த ரூபா 24 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக்கடனுக்காக மீளாய்வாண்டிற்கான வட்டியாக ரூபா 2.77 மில்லியன் செலுத்தப்பட்டது. தற்பொழுது இப்பணத்தை கொடுப்பனவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் வழங்கிய நிறுவனத்தின் உடன்பாட்டுடன், ஒரு முறையான திட்டத்தின்படி அந்தப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 2014/89/554 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 4.56 மில்லியன் பங்கிலாபம் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அந்த பங்கிலாபத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது நடைமுறைப் பொறுப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அக்காலத்தில் கம்பனி இலாபம் உழைத்ததன் அடிப்படையில் இப்பங்கிலாபம் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் பணக் கொடுப்பனவிற்காக போதியளவு காசுப் பாய்ச்சல் இல்லாததனால் இப்பங்கிலாப கொடுப்பனவு செய்வதற்கு முடியாதுள்ளது. நிதி நிலைமை நல்ல நிலைக்கு வந்த உடன் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | கம்பனியின் நிதி நிலைமைக்கு ஏற்ப, உரிய கடப்பாடுகளில் இருந்து விடுவிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரங்களை உடனடியாகப் பெறுவதற்கு கம்பனி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பனியிடம் 06 தொழிற்சாலைகள் காணப்பட்டதுடன் நாவல தொழிற்சாலை மற்றும் கடல் மணலை கழுவுதல் மற்றும் தயார்படுத்துதல் தொழிற்சாலையைத் தவிர்த்து ஏனைய அனைத்து தொழிற்சாலைகளும் 2017 | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நட்டம் அடையும் நிலைமைக்கு மாறியிருந்ததுடன் கம்பனியால் 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 57.03 மில்லியன் நட்டம் அடைந்துகொள்ளப்பட்டிருந்தது | | |
| (i) | 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை ஹிங்குராங்கொட மற்றும் அம்பாறை தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் தொழிற்சாலையின் உபகரணங்கள் எந்த பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குதல் அல்லது ஏனைய தொழில் முயற்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அத்தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹிங்குராங்கொட தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதிக அளவான செயற்பாட்டு நட்டம் இடம்பெறுவதனால் இத்தொழிற்சாலையை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலையின் உபகரணங்களை பாதுகாப்பதற்காக ஒரு காவலாளர் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இதில் ஸ்தாபிக்கப்பட்ட இயந்திரம் ஏனைய இடத்தை தெரிவு செய்ததன் பின்னர் அகற்றுதல் பொருத்தமானது என்பதனால் அந்த இயந்திரம் இவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது ஏனைய தொழில் முயற்சி தேவைப்பாடு இருக்கின்றதா என்பதனை ஆராயந்து பார்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கம்பனியிற்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து அதிஉச்ச பயனைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | 30 ஆண்டுகள் காலமாக ஹிங்குராங்கொட திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் பேணப்பட்டு வருகின்ற கம்பனியின் சீமெந்து சார்ந்த உற்பத்தி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ள மொத்தமாக 1.7232 ஹெக்டயர் அளவான அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்கும் சொந்தமான காணிகளின் குத்தகை உரிமை அல்லது உரிமையாண்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அல்லது தாய் நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையும் முடியாதிருந்தது. | இக்காணியைப் பயன்படுத்தும் உரிமை 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கம்பனியால் வைத்துக் கொள்ளப்படுவதுடன் இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் சீமெந்து உற்பத்தியினைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளுக்காக எதிர்வரும் காலத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இக்காணிகளின் குத்தகை உரிமை அல்லது உரிமையாண்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனியால் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கும், கம்பனியின் உற்பத்தி நிலையங்களின் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ''கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டத்திற்காக'' கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17.81 மில்லியன் பெறுமதியான கடல் மணலை பொதி செய்யும் இயந்திரம், ரூபா 0.32 மில்லியனான தொகுதிகளை அச்சிடும் இயந்திரம், ரூபா 7.55 மில்லியன் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் ரூபா 29.74 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட நீரை தேக்கிவைக்கும் குளம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. | கம்பனியால் கடல் மணலை கழுவுகின்ற செயற்த்திட்டத்திற்காக கொள்வனவு செய்த ரூபா 7.55 மில்லியன் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் தாய் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மணலை கழுவுவதற்காக தேவையான சுத்தமான நீரினை தேக்கிவைப்பதற்காக ரூபா 29.74 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட நீரை தேக்கிவைக்கும் குளம் தற்பொழுது மணலை கழுவுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. கடல் மணலை பொதி செய்யும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17.81 மில்லியன் பெறுமதியான கடல் மணலை பொதி செய்யும் இயந்திரம் பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி விற்பனை செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. ரூபா 4.38 மில்லியன் பெறுமதியான ஏனைய சொத்துக்கள் மணலை கழுவும் நடவடிக்கைகளுக்காக தற்பொழுது பயன்படுத்தப்பட்டுள்ளது. வகுதிகளை அச்சிடும் இயந்திரம் நாவல தொழிற்சாலைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் சொத்துக்கள் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மணலை கழுவுவதற்காக கொள்வனவு செய்த (RO Plant) ரூபா 7.55 மில்லியன் பெறுமதியான நீரினை சுத்திகரிக்கும் இயந்திரம் கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கடல் மணலை பொதி செய்யும் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளதுடன் அந்த இயந்திரத்தின் பெறுமதியானது | மணலை கழுவுவதற்காக கொள்வனவு செய்த (RO Plant) இயந்திரம் கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அது தொடர்பாக ரூபா 7.55 மில்லியன் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக தாய்க் கம்பனியான கூட்டுத்தாபனத்துடன் | தாய்க் கம்பனியின் உடன்பாட்டுடன், உரிய கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மணலை பொதி செய்யும் கட்டிடத்தினை பொறுப்பேற்கும் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. | கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் வேலைக்கான ஏதாவது ஒப்பந்த்தின் போது ஒப்பந்தக்காரரினால் உடன்படிக்கை மீறப்படுமாயின் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தப் பணத்தில் 05 சதவீத்திற்கு குறையாத பணம் செயலாற்றல் பிணை முறியாக வேலைக்காக சமர்ப்பித்தல் அத்தியவசியமானதாகும். இப்பிணை முறியானது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறியின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அது வேலையினைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்த்த திகதியின் பின்னர் 28 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். எனினும் கம்பனியால் ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றல் பிணைமுறியானது அவ்வாறு ஒப்பந்த செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படாது அவர்களுக்கு செலுத்துவதற்கு உள்ள விலைப்பட்டியல்களிலிருந்து பின்னைய காலத்தில் கழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கழிக்கப்படுகின்ற ரூபா 1.04 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிக்கூற்றுக்களில் செயலாற்றல் பிணை முறியாக காட்டப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர்களால் செயலாற்றல் பிணைமுறியானது ஒப்பந்த செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படாமையால் அவர்களுக்கு செலுத்துவதற்கு உள்ள விலைப்பட்டியல்களிலிருந்து பின்னைய காலத்தின் போது கழிக்கப்பட்டது. அவ்வாறு கழிக்கப்பட்ட ரூபா 1.04 மில்லியன் பணம் அவர்களினால் எழுத்துமூலம் முறைப்படியாக வேண்டுதல் செய்யப்படாததனால் மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிக்கூற்றுக்களில் செயலாற்றல் பிணை முறியாகச் காட்டி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | செயலாற்றல் பிணைமுறிகளை பெற்றுக்கொள்வதன் மூலம் ஒப்பந்தங்களை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க கம்பனியால் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டிற்காக ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பெறுகைத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது வழக்கமாக நாளதுவரையாக்குவதற்கு உரிய | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கம்பனியால் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகைத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது வழக்கமாக நாளது வரையாக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

## 3.6 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கம்பனி எதிர்பார்த்த ஒப்பந்த வருமானம் ரூபா 135 மில்லியனாக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 54.89 மில்லியன் மாத்திரமாக இருந்ததனால் எதிர்பார்த்த வருமானத்தில் 40.66 சதவீதம் மாத்திரம் கம்பனியால் அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது கம்பனி எதிர்பார்த்த ஒப்பந்த வருமானம் ரூபா 135 மில்லியனாகும் கம்பனியால் ரூபா 40 மில்லியனான 04 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்கு கம்பனியால் ஆண்டில் 16 ஒப்பந்தகாரர்களுக்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அவற்றில் 02 விலைமனுக்களை மாத்திரம் வெற்றிகொள்ளக் கூடியதாக இருந்தது. அதற்கிணங்க இந்த ரூபா 135 மில்லியன் வரம்பினை அடைந்து கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது. | முறையான கிரய பிரதிபலன் பகுப்பாய்வினை மேற்கொண்டு சந்தைப் போட்டித் தன்மைக்கு ஏற்ப திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கம்பனியின் செயலாற்றலினை மேம்படுத்துவதற் கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் ஹொரண வாராந்த சந்தையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கிய ரூபா 4.65 மில்லியன் ஆயத்தப்படுத்துதல் முற்பணத்தில் 2015 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 2.65 மில்லியன் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்துதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை மிகுதியான ரூபா 02 மில்லியன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் முற்பண பிணை முறியினை பெற்றுக்கொள்ளாது உப ஒப்பந்தக்காரர்களுக்கு முற்பணங்கள் வழங்கியதன் காரணமாக கம்பனியால் அறவிடப்படாது காணப்பட்ட முற்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | இச்செயற்திட்டத்தின் உப ஒப்பந்தகாரர்களுக்கு தொடர்ச்சியாக கடிதங்களின் மூலம் இது பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு கொடுப்பனவு செய்ய உள்ள பணம் பிடித்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பனியால் பணத்தை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றநது. | கொள்வனவு வழிகாட்டி வழிகாட்டிக் கோவைக்கு முரணாக, பிணைமுறிகளை பெற்றுக்கொள்ளா மல் முற்பணங்கள் வழங்கப்படக் கூடாது அத்துடன், அவ்வாறு இணக்கமின்றிச் செயற்பட்ட உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்வதற்கும், துணை ஒப்பந்தக்காரரிடமிருந்து முற்பணங்களை அறவிடுவதற்கும் தாமதமின்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும் |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 2018 மே 15 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு உடன்படிக்கை செய்து கம்பனிக்கு வழங்கியிருந்த ஒப்பந்த பெறுமதி ரூபா 9.72 மில்லியனான இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஒரு காணியை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த்தின் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்துடன் 14/01/134/73 இலக்க 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு கடிதத்தின் மூலம் அந்த ஒப்பந்த்தின் அத்திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடக்க மட்டத்தின் வேலைப் பகுதியும் நியம தர மற்றும் உரிய முறைப்படியாக மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கம்பனியால் 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வாடிக்கையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 5.75 மில்லியனான முதலாவது செயல்முன்னேற்ற விலைபட்டியலும் (Progress Claim) வாடிக்கையாளரினால் மீளாய்வாண்டின் இறுதி வரை சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையின் 2018 மே 15 ஆந் திகதிய ஒப்பந்தம் தொடர்பாக மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்திட்ட நடவடிக்கை தொடர்பாக தேவையான விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின்சார சபைக்கு பல கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் எந்த பதிலும் கிடைக்காததன் அடிப்படையில் செயற்திட்டத்தினை நிறுத்துதல் சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பிவைத்து உரிய முதலாவது விலைப்பட்டியலினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின்படி உரிய கட்டணப் பட்டியல்களை அறவிடுவதற்கும், ஒப்பந்தங்களின் செயலாற்றலினை அதிகரிப்பதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | முண்டிகல ஆரண்ய வன முகாமில் இருமாடி கட்டிடத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக 2016 யூலை 20 ஆந் திகதி கம்பனி பொறுப்பேற்ற ரூபா 13.91 மில்லியனான ஒப்பந்தம் 120 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் வேலை முடிவடைந்திருக்காததுடன் தாமத காலத்திற்காக கால நீடிப்பு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் ரூபா 1.39 மில்லியன் தாமதக் கட்டணத்தை கம்பனிக்குச் செலுத்தும் ஆபத்து காணப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 7.53 மில்லியன் கம்பனியினால் அறவீடு செய்ய வேண்டி இருந்தது. | இரண்டு தரப்பினர்களும் இணங்கி கொண்ட வகையில் இச்செயற்திட்டத்தினை முடிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தப் பணிகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதுடன், அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தைத் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பனியால் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 87.31 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்த செயற்பாடுகள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை இது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட முழு ஒப்பந்த செயற்பாடுகளின் பெறுமதி ரூபா 14.29 மில்லியன் மாத்திரமாகும். கம்பனியால் திணைக்களத்துடன் மேற்கூறிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் வழங்கிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவு செய்ய வேண்டிய முறைமைக்கு இணங்க உரிய உற்பத்திகளை முழுமையாக முடிவு செய்ததன் பின்னர் எடுத்துச் செல்வதற்கு முன்னர் உற்பத்திப் பெறுமதியில் 60 சதவீதமும் மிகுதிப் பணம் பொருத்தியதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசின் அடிப்படையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உள்ளடக்கிய நிபந்தனை தொடர்பாக கவனம் செலுத்தப்படாது கம்பனிக்கு சாதகமான வகையில் இணக்கப்பாட்டிற்கு வந்துகொள்ளாததன் காரணமாக 2021 யூன் 13 ஆந் திகதி இரு தரப்பினர்களின் இணக்கப்பாட்டில் மேற்கூறிய 04 ஒப்பந்த செயற்பாடுகளின் வேலைகளை தொடர்ந்தும் பூர்த்திசெய்தல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கூறிய ஒப்பந்த செயற்பாடுகளுக்காக ரூபா 2.82 மில்லியன் மாத்திரம் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் ரூபா 2.63 மில்லியன் பெறுமதியைக் கொண்ட நிறுத்திவைத்தல் பணம் மற்றும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட முழுச் செலவுகளையும் அறவீடு செய்யும் ஆபத்து காணப்படுகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இக்கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. மேற்கூறிய 04 ஒப்பந்த செயற்பாடுகளுக்கான ஆயத்தப்படுத்தல் முற்பணமாக ரூபா 17.46 மில்லியன் கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் ரூபா 2.82 மில்லியன் பணம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எங்களால் செலவு செய்யப்பட்ட பணத்தை இதன் மூலம் அறவீடு செய்யக்கூடியதாக உள்ளது. இது சம்பந்தமாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | கம்பனிக்குச் சாதகமான வகையில் வெளிவாரியான தரப்பினருடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், ஒப்பந்தப் பணிகளைத் திறம்படவும் பயனுள்ள வகையிலும் நிறைவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன், அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தைத் தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஊ) | கம்பனிக்கு 2016 ஆம் ஆண்டில் தாய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்த ரூபா 20.29 மில்லியன் பெறுமதியைக் கொண்ட உப ஒப்பந்த செயற்பாடாக கிடைத்த உடுகிரிஎல்ல குளத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கான ஆயத்தப்படுத்தல் முற்பணத்தை தாய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த ஒப்பந்த செயற்பாட்டை பூர்த்திசெய்வதற்கு ரூபா 6.90 மில்லியனை கம்பனி செலவு செய்திருந்தும் எந்த பணத்தையும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இச்செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டு தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்திட்டம் என்பதனால் இது சம்பந்தமாக ஆய்வுசெய்து தாய்க் கம்பனியுடன் கலந்துரையாடி துரிதமாக உரிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒப்பந்தங்கள் முறையாக மறுஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அவை திறம்படவும் பயனுள்ள வகையிலும் நிர்வகிக்கப்பட வேண்டும் அத்துடன், கிடைக்க வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | | | பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பஹா போகஹபிடிய சப்பாத்து பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பாக கம்பனியால் 2014 ஒக்தோபர் 05 ஆந் திகதி நீர்ப்பாசன திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 4.43 மில்லியன் பெறுமதியைக் கொண்ட ஒப்பந்தம் கம்பனியால் இரண்டு உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. வெள்ள நிலைமையின் காரணமாக தயாரிக்கப்பட்ட தற்காலிக அணை உடைந்திருந்தும் காப்புறுதி கம்பனியால் இழப்பீட்டினைச் செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உப ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்திய ரூபா 1.35 மில்லியன் கம்பனியால் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 0.73 மில்லியன் பெறுமதியான முதலாவது விலைப்பட்டியல் நீர்பாசனத் திணைக்களத்திற்கு 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது இன்று வரை சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த திணைக்கதள்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப்படுத்தல் முற்பணமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் பல சந்தர்ப்பங்களின் போது முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சிறந்த பதில் கிடைத்திருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் இப்பணத்தை அறவீடு செய்வதற்காக வரிசை அமைச்சினூடாக நீர்ப்பாசன திணைக்களம் உரிய அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி-. |
| (ஏ) | பர்கன் வீதியில் உத்தேச சமூக மண்டபத்தை நிர்மாணிப்பது தொடர்பாக கம்பனியால் நகர அபிவிருத்தி அதிகாரசபை உடன் 2016 யூன் 07 ஆந் திகதி ரூபா 6.98 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததுடன் அது தொடர்பாக ரூபா 1.39 மில்லியனான ஆயத்தப்படுத்தல் முற்பணப் பெறுமதியில் ரூபா 1.04 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. அவ்வாறே ஒப்பந்த செயற்பாடு உப ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6.10 மில்லியன் பெறுமதிக்கு கம்பனியால் வழங்கப்பட்டிருந்தும் அச்செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரை முடிவடைந்திருக்காததுடன் இச்செயற்பாட்டிற்காக உப ஒப்பந்தக்காரருக்குச் செலுத்திய ரூபா 1.10 மில்லியன் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. கம்பனியால் 2018 | இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவு செய்து வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு அதனை பொறுப்பேற்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது தெரியப்படுத்தியிருந்தும் வாடிக்கையாளர் நிறுவனம் அதனை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் வாடிக்கையாளர் நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும். | கம்பனிக்குச் சாதகமான வகையில் வெளிவாரியான தரப்பினருடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், ஒப்பந்தப் பணிகளைத் திறம்படவும் பயனுள்ள வகையிலும் நிறைவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 18 ஆந் திகதி சமர்ப்பித்த ரூபா 2.43 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் சான்றுபடுத்தாது காணப்பட்டது. | | எடுக்க வேண்டும் அத்துடன், அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தைத் தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஐ) | ஒப்பந்த செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் சுகாதார அமைச்சுடன் மேற்கொண்டிருந்த 04 ஒப்பந்த செயற்பாடுகள் 2023 செப்தெம்பர் ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அங்கீகரித்த செயற்திட்ட மதிப்பீடானது நிரந்தர தொழில் நுட்ப குழுவிற்கு (Standing Technical Committee) சமர்ப்பித்து விலைமனுக்களுக்கு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி இந்த 04 ஒப்பந்த செயற்பாடுகளுக்காக உடன்படிகன்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தும் அந்த நிறுவனங்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் இது சம்பந்தமாக நடவடிக்கை எழுத்து முறைப்படியாக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் செயற்திட்ட மதிப்பீட்டினை நிரந்தர தொழில்நுட்ப குழுவிற்குச் சமர்ப்பித்து விலை மனுக்களுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்கள் தொடர்பான அகக் கட்டுப்பாடுகள் முறையாக மறுஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அந்த ஒப்பந்தங்கள் உரிய விதிகள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு இணங்க விளைதிறனாகவும் வினைதிறனான வகையிலும் நிர்வகிக்கப்படுதல் வேண்டும் |
| (ஒ) | லக்விஜயா மின் உற்பத்தி நிலையத்தின் துணைப் பொருளாகக் கிடைக்கும் மரச் சாம்பல்களை (Fly Ash) மாதம் ஒன்றுக்கு 3,600 மெட்ரிக் தொன் கொள்முதல் செய்வதற்காக, அந்த மின் உற்பத்தி நிலையத்துடன் கம்பனி 2024 அக்டோபர் 01 ஆம் திகதி முதல் 03 ஆண்டுகளுக்கு ஒப்பந்தமொன்று செய்திருந்ததுடன் மெட்ரிக் தொன் ஒன்று ரூபா 3,717 வீதம், 3,600 மெட்ரிக் தொன்களையும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 2% வீதம் விற்பனை விலை அதிகரிப்புடன் விற்பனை செய்வதற்காக 2024 ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த வாங்குபவர் டெண்டர் நடைமுறைக்கு புறம்பாகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் லக்விஜய மின்நிலையத்திடமிருந்து (ஒப்பந்ததாரர்) மரச் சாம்பல்களை (Fly Ash) இனை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னரே, குறித்த தனியார் நிறுவனத்துடன் விற்பனை ஒப்பந்தம் செய்து கொண்டமையும் கணக்காய்வின்போது சிக்கலாகக் காணப்பட்டது. இச்சூழ்நிலையின் கீழ், 2024 | இந்த விடயம் குறித்து உண்மைகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கெனக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் முடிவுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>லக்விஜயா மின் உற்பத்தி நிலையத்தின் துணைப் பொருளாகக் கிடைக்கும் மரச் சாம்பல்களை (Fly Ash) மாதம் ஒன்றுக்கு 3,600 மெட்ரிக் தொன் கொள்முதல் செய்வதற்காக, அந்த மின் உற்பத்தி நிலையத்துடன் கம்பனி 2024 அக்டோபர் 01 ஆம் திகதி முதல் 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தமொன்று செய்திருந்ததுடன் மெட்ரிக் தொன் ஒன்று ரூபா 3,717 வீதம், 3,600 மெட்ரிக் தொன்களையும் ஒரு தனியார் நிறுவனத்திற்கு | சாத்தியமானவரை, டெண்டர் நடைமுறை ஊடாக பகிரங்கப் போட்டிக்கு இது சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆம் ஆண்டில் 10,052.4 மெட்ரிக் தொன் மரச் சாம்பல்களை (Fly Ash) இந்தத் தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுக்கு 2% வீதம் விற்பனை விலை அதிகரிப்புடன் விற்பனை செய்வதற்காக 2024 ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த வாங்குபவர் டெண்டர் நடைமுறைக்கு புறம்பாகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் லக்விஜய மின்நிலையத்திடமிருந்து (ஒப்பந்ததாரர்) மரச் சாம்பல்களை (Fly Ash) இனை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னரே, குறித்த தனியார் நிறுவனத்துடன் விற்பனை ஒப்பந்தம் செய்து கொண்டமையும் கணக்காய்வின்போது சிக்கலாகக் காணப்பட்டது. இச்சூழ்நிலையின் கீழ், 2024 ஆம் ஆண்டில் 10,052.4 மெட்ரிக் தொன் மரச் சாம்பல்களை (Fly Ash) இந்தத் தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. |

### 3.7 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரித்த ஆளணியினர் 136 ஆக இருந்ததுடன் நிரந்தரமான உள்ளபடியான ஆளணியினர் 45 ஆகவும் ஒப்பந்த மற்றும் அமைய ஆளணியினர் 30 ஆகவும் உள்ளனர். அதற்கிணங்க கம்பனியில் காணப்பட்ட நிரந்தர உள்ளபடியான ஆளணியனரின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 62 ஆகக் காணப்பட்டதுடன் மத்திய முகாமைத்துவ மட்டத்திலுள்ள வெற்றிடங்கள் 06 மற்றும் கீழ் முகாமைத்துவ மட்டத்திலுள்ள 11 பதவி வெற்றிடங்கள் 10 ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 18 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 27 நிரந்தர வேலையாளர் பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாக இருந்தும் அங்கீகரித்த ஆளணியை திருத்தம் செய்வதற்கும் | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கம்பனியின் நிரந்தரமான உள்ளபடியான ஆளணியினரின் இரண்டு உயர் (06) நிரந்தர அடிப்படையில் பூர்த்திசெய்யப்படாதிருந்த போதிலும் அந்த ஆறு பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையிலும் வேலைகளை நிறைவேற்றும் அடிப்படையிலும் உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய மற்றும் கீழ் முகாமைத்துவ மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் அப்பதவிகளில் இருக்க வேண்டிய உத்தியோகத்ரத்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் அதற்கு கீழ் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களால் ஏதாவது மட்டத்திற்கு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக கீழ் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் | கம்பனியின் செயலாற்றலுக்கு ஏற்ப, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் பதவிகளின் எண்ணிக்கையை மீண்டும் மீளாய்வு செய்து திருத்தம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தியவசியமான உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புதல் தாமதித்தல் தொடர்பாக நிறுவனத்தின் நிதி நிலைமையைப் போல நிர்மாணத்துறையில் உருவாகியுள்ள பின்னடைவின் காரணமாக அது தொடர்பான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் மட்டுப்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | அங்கீகரித்த 10 மத்திய முகாமைத்துவ பதவிகளில் 06 பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் பொறியியலாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், வழங்கல் முகாமையாளர், அளவீட்டு மதிப்பீட்டாளர் ஆகிய பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பனிக்கு முடியாதிருந்தது. எனவே கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | மத்திய முகாமைத்துவ மட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்களைப் போல கம்பனியின் நிதி நிலைமையும் காரணமாக இருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது மத்திய முகாமைத்துவ மட்டத்திலுள்ள பொறியியலாளர் (சிவில்) மற்றும் அளவீட்டு மதிப்பீட்டாளர் ஆகிய பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். எனினும் அளவீட்டு மதிப்பீட்டாளர் பதவியினை வகிக்கும் நபர் இராஜினாமா செய்துள்ளார். | அங்கீகரித்த அத்திவயவசியமான ஆளணியினரை துரிதமாக சேர்த்துக்கொண்டு கம்பனியின் செயற்பாாட்டு நடவடிக்கைகளை தாமதமின்றித் திறம்பட முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வழங்கிய அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் பந்தி இலக்கம் 3.1 இன் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் அவர்களின் ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஊழியர்களுக்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்தவாறு அந்த ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஊதியங்கள் மீளாய்வு செய்யப்பட்டு இப்பட்டியல் அவ்வப்போது திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்கு இணங்க நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்து சிபாரிசினை சமர்ப்பிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக்குழுவின் சிபாரிசினை சமர்ப்பித்ததன் பின்னர் கம்பனியின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விபரம் பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பணியாளர் மீளாய்வு ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கான முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்பாட்டு கையேட்டின் 3.2 ஆம் பகுதிக்கு இணங்க நிறுவனத்தின் ஊழியர் பதவி, ஆட்சேர்ப்பு திட்டம் | நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமமுறையை மீளாய்வு | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சம்பளக் |

| | | | |
|---|---|---|---|
| | சம்பள கட்டமைப்பும் படிகளும் என்பவைகளை உள்ளடக்கிய ஊழியர் எண்ணிக்கை தொடர்பான வேண்டுதல்கள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக வரிசை அமைச்சின் சிபாரிசுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளனர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதன் பிரதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது உரியவாறு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்து நாளதுவைரயாக்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக்குழுவின் சிபாரினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நாளதுவைரயாக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பள கட்டமைப்பினை வரிசை அமைச்சின் சிபாரிசுடன் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கட்டமைப்புகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவற்றுக்கான தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |
| (உ) | 1999 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய 99/18/40 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் கம்பனியின் ஆட்சேர்பபு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தும் செயற்பாட்டு கையேட்டின் 3.4 ஆம் பகுதியின் பிரகாரம் ஊழியர் பதவி மற்றும் ஆட்சேர்பபு திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காததனால் தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவிகளுக்குரிய தகமைகளைப் பரீட்சிப்பதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. | கம்பனியின் ஆட்சேர்பபு நடைமுறையினை நாள்துரையாக்குவதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின் அடிப்படையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த ஆட்சேர்பபு நடைமுறையினைத் தயாரித்ததன் பின்னர் உரிய அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படும். | -மேற்படி- |
| (ஊ) | 2010 இலிருந்து 2024 வரை பல்வேறு பதவிகளுக்கு கம்பனியின் கீழ் கூட்டுத்தாபனத்தின் மூலம் உரிய நடைமுறையின்றி சேர்த்துக்கொள்ளப்பட்ட 191 உத்தியோகத்தர்கள் சம்பளத்தை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த ஊழியர்கள் கம்பனியின் அங்கீகரித்த ஆளணியின் கீழ் அல்லது கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த ஆளணியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு உதவியளிப்பதற்காக நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எங்கள் கம்பனியால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை முறைப்படியாக பேணுவதற்காக 2010 இலிருந்து 2024 வரை பல்வேறு பதவிகளுக்கு 191 உத்தியோகத்தர்கள் கம்பனிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு சம்பளத்தை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக கூட்டுத்தாபனத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டுள்ளதுடன் கம்பனி இதற்காக இலாபமும் உழைத்துள்ளது. இந்த ஆளிணியனர் (Manpower) நிரந்தர ஆளணியினர் இல்லாததுடன் வருமானத்தை உழைப்பதற்காக மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். | -மேற்படி- |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாடடுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில் முயற்சி நிறுவனங்களின் வருடாந்த நிதிக் கூற்று க்களை நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியால் மீளாய்வாண்டிறநகான நிதிக்கூற்றுக்கள் 2025 மே 21 ஆந் திகதி அதாவது 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் தாமதித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்தன. | 2025 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயித்த திகதியில் இறுதியான நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் விதிமுறைகளுக்கு அமைவாக, நிதிக்கூற்றுக்கள் உரிய காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்திய அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளுக்கான நல்லாட்சிக்கான வழிகாட்டிக் ரோகவையின் 03 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கம்பனி ஆரம்பித்த 1983 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் இறுதி வரை, அதன் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | கம்பனியின் கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்கள் தாய்க் கம்பனியான காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பாராளு மன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |

### 4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக தம்மால் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என கம்பனியின் பணிப்பாளர் சபை சான்றுபடுத்த வேண்டியதுடன் 05 ஆண்டுகள் காலத்திற்கான தந்திரோபாயத் திட்டம், இடைவெளிப் பகுப்பாய்வு (Gap Analysis) என்பவற்றை அடைந்துகொள்வதற்காக தந்திரோபாயங்களை உள்ளடக்கி தொழில் முயற்சி சுற்றாடலில் இடம்பெறுகின்ற மாற்றங்களக்கு இணங்கும் வகையிலான திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் நாளதுவரையாக்கப்பட்டு தமது தாய்க் கம்பனிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று ஆண்டுகளுக்காக அதாவது 2024 இலிருந்து 2028 வரையான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வெளிப்படுத்தலினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டது. உங்களின் அவதானிப்பில் காட்டப்படுகின்ற வகையில் கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், கம்பனியின் செயல்பாடுகள் அதற்கேற்ப பராமரிக்கப்பட வேண்டும். |

### 4.4 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01./2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது எதிர்பார்த்த குறிக்ோகளின் பிரகாரம் செயற்பாடுகளை நடைமுறைச் சாத்திய ஒழுங்கின படியும் விபரமாகவும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பினை நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைத்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினை காட்டுதல் இடம்பெறவேண்டியதுடன் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான நிதி மதிப்பீட்டினை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்து 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் முறைப்படியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கம்பனியின் முன்னணி செயற்பாடுகளுக்கான மீளாய்வாண்டிற்கான பிரதான செயலாற்றல் குறிகாட்டி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கம்பனியால் பிரதான செயலாற்றல் குறிகாட்டி (KPI) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் | செயலாற்றலினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் பிரதான |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது. | அதற்கிணங்க செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயலாற்றல் குறிக்காட்டி தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 4.5 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பனியின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தனியான ஒரு உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்படட்டிருக்காததுடன் கம்பனியின் தாய்க் கூட்டுத்தாபனமான இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக நிறுவனத்தின் பௌதீக நிதி மற்றும் மனித வளங்களைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் பொதுமக்களின் நிதி ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் செலவு செய்யப்படுதல் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் நிறுவனத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முறைப்படியாக அமுல்ப்படுத்தப்படுகின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல் முதலிய செயற்பாடுகளை முறைப்படியாக மீளாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | இந்த விடயங்கள் சம்பந்தமாக கம்பனியின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. அதற்கிணங்க வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை தாய்க் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை முறைப்படியாக மீளாய்வு செய்து அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைவாக, ஓர் உள்வாரி கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட வேண்டும். |

### 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நல்லாட்சிக்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்திக்கு அமைவாக வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று அது அமுல்ப்படுத்தப்பட்டது. கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் 01./2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையில் அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நல்லாட்சிக்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் C பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த பாதீட்டினைத் தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைக்கு இணங்க வரவு செலவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அது ஒரு நிர்வாக மற்றும் நிதித் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |